படையிலே ஷிப்ட் சிஸ்டம் என்பதைவிட 3 ஆண்டுக் கல்வியை 4 ஆண்டுகளாக அதிகப்படுத்தி பார்ட் டைம் கல்வி என்ற வகையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த முறையை மேலும் விரிவுபடுத்த முடியுமா என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அந்த முறை மேலும் விரிவுபடுத்தப்பட்டால் மேலும் அதிகமான மாணவர்களுக்கு வாய்ப்புத் தர முடியும்.

அடுத்ததாக புதிய பிரிவுகளைத் துவங்குவது பற்றி ஆராய்ந்து அந்த வகையில் புதிய பிரிவுகளை ஆரம்பிப்பதற்குரிய உத்தேசம் வைத்துக்கொண்டிருக்கிறோம். இதிலே குறிப்பாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அடுத்து இந்தமாதிரி வேலைகள் என்று பார்க்கின்றபோது அதிலே படித்தவர்களுக்கு வெளியே வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. அதே நேரத்தில் புதிய வேலைகள் என்று சொல்கின்றபோது அதிலே சேர்ப்பதற்கு தகுதி படைத்தவர்கள் கிடைக்காத நிலைமையையும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் எத்தகைய புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாகும் என்பதைக் கருத்தில் கொண்டு அந்தப் புதிய பாடங்களை ஆரம்பித்தால் தான் இந்த இரண்டு பிரச்சினைகளையும் நாம் சரியாக ஆராய்ந்து முடிவு எடுத்தவர்களாவோம். ஆகவே, அந்த அடிப்படையிலேதான் அதிகாரிகளும், நிபுணர்களும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எல்லாவித முயற்சிகளையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இது குறித்து சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கவேண்டிய தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பை எடுத்துக்கொள்ளுதல்.

திரு. து. புருஷோத்தமன்: தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை, 247-வது விதியின் கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்சினை குறித்து நான் தங்களுக்கு அனுப்பினேன். அதாவது தாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு முன்னாலேயே நான் நம்முடைய செயலாளர் அவர்களிடத்திலே

அதைக் கொடுத்தேன். அதிலே ஒரு முக்கியமான அறிவிப்பு குறித்து அதாவது ஏறக்குறைய 33 இலட்சம் ரூபாய் பைனான்சியல் கமிட்மென்ட் குறித்து நான் ஒரு உரிமை மீறல் பிரச்சினை பற்றிக் கொடுத்திருந்தேன் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள அறிவிப்பு என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பெற்று நான் அதற்கான பதிலையும் அனுப்பி இருக்கிறேன். அந்தப் பதிலைப் பார்த்துக்கொள்ளலாம்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, அதிலே உள்ள ஒரு முறை பற்றி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்கான பதிலை உங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். அதைப் பார்த்த பிறகு எந்தவிதியின்கீழ் அதைக் கொண்டு வரவேண்டுமோ அந்த விதியின் கீழ் கொண்டுவரவேண்டுமே தவிர இப்படித் திடீரென்று எழுந்து பேசுவது கூடாது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு ஒழுங்குப் பிரச்சினை. 54-வது விதியின் கீழ், தாம்பரம் தொகுதியிலே இருக்கிற பம்மல் என்ற இடத்திலே நடந்த கலவரத்திலே ஒரு சாராரை கைது செய்திருக்கிற காரணத்தினாலே அங்கு இருக்கிற பெண்களே புகார் கொடுத்திருக்கிறார்கள். அதை விசாரிக்காத காரணத்தினாலே அந்த தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினரே உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒழுங்குப் பிரச்னை என்று சொல்லி இவற்றை எல்லாம் சொல்லக் கூடாது. திருவாளர்கள் துரைமுருகன், இரகுமான்கான் அல்லது அவர்களது கட்சித் துணைத் தலைவர் ஆகியோரை எப்படி, எந்த விதியின் கீழ் இந்தப் பிரச்சினையை அவையில் எழுப்புவது என்று தெரிந்து, செயல்படலாம். நீங்கள் எழுப்பிய பிரச்சினை எல்லாம் பட்ஜெட் பொதுவிவாதத்திலே குறிப்பிடப் பெறலாம்; வேறு பலவிதமான விதிகளின் கீழும் எழுப்பப் பெறலாம். உறுப்பினர்கள் தங்களது உரிமையை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்று தெரிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும். ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் எழுப்பக் கூடாது.